රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

அரச கணக்குகள் திணைக்களம்

# Department of State Accounts

මගේ අංකය / எனது இல. / My No. SA/MA/C'CULAR | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2014.01.07

அரச கணக்குகள் சுற்றுநிருப இல: 235/2013

அனைத்து வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும்

## 2013ஆம் ஆண்டுக்கான வருமானக்கணக்கு

நிதிப்பிரமாணம் 151 இற்கு அமைய அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களும் 2013 ஆம் ஆண்டிற்கான வருமானக்கணக்கை தங்களது வருமான குறியீடுகளுக்கு அமைய தயாரித்து, சரிபார்த்து, கையொப்பம் இட்ட பின்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அவரது சாண்றுக்காக சமர்பிக்கப்படல் வேண்டும்.

2. இது சம்மந்தமாக 29.12.2010 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2010, 31.05.2011 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம1/2002(xi), 28.06.2011 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2002(xii),15.07.2011 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2002(xii), 15.07.2011 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2002(xiii), 27.06.2013 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2002(xiv), 03.09.2013 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2002(xv), 22.10.2013 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2002(xvi) மற்றும் பொது நிதி கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பாக 1.1.2010 இல் 04.12.3013 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2002(xvii) அமுலுக்கு வரும் வகையில் பிண்ணிணைப்பு அட்டவனை 1 வருமான வகைப்படுத்தல்கள் என்பவற்றின் மீது தங்கள் தாழ்மையான கவனம் ஈர்க்கப்படுகின்றது.இதனடிப்படையில் தங்கள் நிறுவனத்திற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள வருமான இலக்கங்கள், கணக்கு கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டுக்கான வருமானக்கணக்கினை டிஜிஎஸ்ஏ 1 வருமானம் மற்றும் டிஜிஎஸ்ஏ 2 வருமானம் படிவங்களின அடிப்படையில் ஒவ்வொரு வருமானக் குறியீட்டுக்கும் தனித்தனியாக தயாரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

3. டிஜிஎஸ்ஏ 2 வருமானம் படிவத்தின்படி கடந்த 3 ஆண்டுகளுக்கான தொகையை தாங்கள் குறத்துக்காட்டும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். ஆகவே தாங்கள் சரியான வருமான தொகைகளை குறித்த ஆண்டிற்காக சமர்பிக்கப்படுவதையும் 2013 ஆண்டுக்கான வருமான கணக்கு தொகைகள் திறைசேரியின் 2013 ஆம் ஆண்டுக்கான இறுதிக்கணக்கு கூற்றுடன் இணக்கப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக சரியான ஒத்த வருமானக் குறியீடுகளை தீர்மானிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவதுடன் இது தொடர்பாக



මහ භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை. General Treasury, Colombo 01, Sri Lanka. General - Tel.: +94 112 484600 Website: www.sad.gov.lk
Director General - Tel.: +94 112 484728 Fax: +94 112 473856 e-mail: dgsa@sad.treasury.gov.lk Additional Director General - Tel.: +94 112 484898
Director (Accounting & Reporting): +94 112 484747 Director (Accounting Services): +94 112 484753 Director (Systems & Training): +94 112 484733

அனைத்து வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வினியோகிக்கப்பட்ட 27.09.2006 ஆம் திகதிய 187/2006 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்று நிருபத்தை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

4. கடந்த சில வருடங்களில் சமர்பிக்கப்பட்ட வருமானக்கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்பிக்கப்பட்டுள்ள பிரதான 5 கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

4.1 வருமான மதிப்பீடுகளை முன்மதிப்பிடும் போது உண்மை பெறுமதிகள் பாவிக்கப்படாது இருப்பதுடன் தேவைப்படும் போது நிதி கொள்கை திணைக்களத்திற்கு அறிவித்து மதிப்பீடுகளை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.

4.2 அறவிட வேண்டிய தொகைகளின் கூற்று ஒவ்வொரு அரையாணடிற்கு ஒருமுறை பணிப்பாளர் நாயகம், நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு அனுப்பப்படாமை.அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவிடப்பட வேண்டிய வருமானங்களை அறவிட்டுக்கொளவதற்கான போதிய சன்றுகளை திரட்டாமை.சரியான தொகையை தீர்மானிப்பதற்கு இயலாமையும் வசூலிக்கப்பட்ட கனிசமான பகுதிகளை இணக்கப்படுத்தாமையும்.( அறவிடப்பட வேண்டிய வருமான அறிக்கைகளை இன்னும் கணக்காய்வு சமர்பிக்கப்படாமை) அறவிடப்படாத வருமானங்களை அறவிடப்படுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை. ஏன்பவற்றுடன் அறவிடப்படாத வருமானங்கள் குறித்தகாலப்பகுதியில் அறவிட்ட தொகைகள் வேறாக அறிக்கைபண்ணுவதில் தவறியமை.

4.3 ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களில் மாதாந்த கணக்கு கூற்றுக்களினுடாக வருமான கணக்கிற்க்கு வரவு செலவு வைக்கப்பட்டவை தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வரவு செலவு தாள்கள இணக்கம் காணப்படாமை.

4.4 திணைக்கள கணக்குகள் திறைசேரி print out உடன் இணக்கம் காணப்படாமை.

2013 ஆம் ஆண்டிற்குரிய வருமானக்கணக்கு தயாரிக்கின்ற போது மேற்படி குறைபாடுகள் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதுடன் விசேடமாக இக்கணக்ககள் தயாரிக்கின்ற போது 2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டு கணக்கு தொடர்பாக இணக்க முறை கணக்கு வைப்பதை அடிப்படையாக கொண்டு வரவு செலவுகளுக்கான தகவல்கள் உள்ளடக்கப்படுவதுடன் வருட இறுதியில் தயாரிக்கப் படுகின்ற நிதி நிலமை கூற்று ஏனையவற்றுடன் இணங்க வேண்டும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

5. வருமானகணக்கு மூன்று மொழிகளில் ஒரு தனி ஆவணமாக டிஜிஎஸ்ஏ வருமான மாதிரி படிவம் 1 மற்றும் டிஜிஎஸ்ஏ வருமானம் மாதிரி படிவம் 2 ற்கு ஏற்ப A4 அளவு கடதாசியில் தயாரிக்கப்பட்டு கணக்கு கிளைத்தலைவர் தனது தனிப்பட்ட கவனத்தை செலுத்தி அதன் சரியான தன்மையை சோதிப்பதோடு கணக்கீட்டு உத்தியோகத்தர் அவ் ஆவணத்தில் கையொப்பம் இட வேண்டும். பின்னர் அவற்றில் 3 பிரதிகள்

கணக்காய்வாளர் நாயகத்திற்கு 31.03.2014 ற்கு முன்னர் அனுபப்பட வேண்டும்.மேலும் கைஒப்பமிடும் போது கேட்க்கப்பட்ட எல்லா தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. டிஜிஎஸ்ஏ வருமான மாதிரி படிவம் 1 மற்றும் டிஜிஎஸ்ஏ வருமானம் மாதிரி படிவம் 2 என்பவை அரச கணக்குககள் திணைக்களத்தின் இணையத்தளம் www.treasury.gov.lk இல் இருந்து படிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்பதுடன் மேலதிகமாக தேவைப்படும் போது பிரதிப்பணிப்பாளர, கணக்குகள் சேவை அவர்களிடமிருந்து pen drive இல் பிரதி செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு பணப்பாளர், கணக்குகள் சேவை தொலை பேசி இலக்கம் 011-22484753 மேலும் பிரதிப்பணிப்பாளர் கணக்குகள் சேவை தொலை பேசி இலக்கம் 011-2484649 என்பவறறினஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

7. கணக்காய்வு செய்யப்பட்ட வருமானக்கணக்கு பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்தினால் பின் வருமாறு அனுப்ப படும்.

| | | |
|---|---|---|
| 1. மூலப் பிரதி | - | அரச கணக்குகள் திணைக்களம் |
| 2. இரண்டாவது பிரதி | - | உரிய அமைச்சு / திணைக்களம் |
| 3. மூண்றாவது பிரதி | - | கணக்காய் வாளர் நாயகத்தினால் வைத்துக்கொள்ளப்படும் |

ஒப்பம்: என்.ஜீ. தயாரத்ன

அரச கணக்குகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம்

திறைசேரி பிரதிச் செயலாளருக்காக

பிரதிகள்:

1. கணக்காய்வாளர் நாயகம்
2. பணிப்பாளர் நாயகம், நிதி கொள்கைகள் திணைக்களம்

2013 දෙසැම්බර් 31 දිනට අවසන් වර්ෂය සඳහා වූ ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආදායම් ගිණුම

2013 திசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசாங்கத்தின் அரசிறை கணக்குகளின் பொழிப்பு

## Summary of the Revenue Accounts for the Government of the Democratic Socialist Republic of Sri Lanka for the year ended 31st December 2013

ආදායම් ගණන්දීමේ නිලධාරී / அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர் / Revenue Accounting Officer :

වියදම් ශීර්ෂ අංකය / செலவின தலைப்பு இல: / Expenditure Head No.

| ආදායම් සංකේතය<br>அரசிறை குறியீடு<br>Revenue code | ආදායම් සංකේත විස්තරය<br>அரசிறை குறியீடு விவரணம்<br>Description of Revenue Code | 2013 මූලික ආදායම් ඇස්තමේන්තුව<br>மூல அரசிறை மதிப்பீடு 2013 Original Revenue Estimate 2013 | 2013 සංශෝධිත ආදායම් ඇස්තමේන්තුව<br>திருத்திய அரசிறை மதிப்பீடு 2013<br>Revised Revenue Estimate 2013 | 2013 රැස්කරන ලද මුළු ශුද්ධ ආදායම් (දළ ආදායම්- ආදායම් ආපසු ගෙවීම්)<br>சேகரிக்கப்பட்ட மொத்த தேசிய அரசிறை (அரசிறை மீளளிப்புகளை கழித்து) மொத்த அரசிறை 2013<br>Total Net Revenue Collected (Gross Revenue less Revenue Refunds) 2013 | 2012 රැස්කරන ලද මුළු ශු.ආදායම (දළ ආදායම්-ආදායම් ආපසු ගෙවීම්)<br>சேகரிக்கப்பட்ட மொத்த தேசிய அரசிறை (அரசிறை மீளளிப்புகளை கழித்து) மொத்த அரசிறை 2012<br>Total Net Revenue Collected (Gross Revenue less Revenue Refunds) 2012 |
|---|---|---|---|---|---|
| | | රු./ ரூபா/Rs. | රු./ ரூபா/Rs. | රු./ ரூபா/Rs. | රු./ ரூபா/Rs. |
| | | | | | |
| | එකතුව/ மொத்தம்/ Total | - | - | - | - |

මෙම සාරාංශ ප්‍රකාශයෙහි සඳහන් සියළුම සංඛ්‍යා, පවත්වාගෙන යනු ලබන ගිණුම් පොත්වල සඳහන් සංඛ්‍යා සමඟ එකඟවන බවත්, ඒවා භාණ්ඩාගාරයේ ගිණුම් පොත් සමඟ සසඳන ලද බවත් සහතික කරමි.

இக்கணக்குகளில் காணப்படும் புள்ளி விபரங்கள் வைத்திருக்கப்படும் கணக்குப் புத்தகங்களிலுள்ள புள்ளி விரங்களுடன் ஒத்திருக்கின்றன வெனவும் இப்புள்ளி விரங்கள்

Certify that the figures appear in this Summary Statement are in agreement with the figures in the Books of Account maintained and all these figures have been reconciled with the figures in the Treasury Books of Account.

දිනය / திகதி / Date

ප්‍රධාන ගණකාධිකාරී/මුදල් අංශයේ ප්‍රධානි නම සහ අත්සන
பிரதான கணக்காளரின்/நிதிப்பகுதியின் தலைவருடைய கையொப்பமும் பெயரும்
Signature and Name of Chief Accountant / Head of Finance

ආදායම් ගණන්දීමේ නිලධාරී නම,තනතුර සහ අත්සන
வருவாய் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பமும் பெயரும் பதவியும்
Signature, Name and Designation of Revenue Accounting Officer

ඩී.ජී.එස්.ඒ - ආදායම්-2 / அ.க.ப.ந அரசிறை-2 /DGSA-Revenue-2

**2013 දෙසැම්බර් 31 දිනට අවසන් වර්ෂය සඳහා වූ ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආදායම් ගිණුම**

**(සැම ආදායම් සංකේතයන් සඳහාම වෙනම ගිණුමක් පිළියෙල කළ යුතුය.)**

2013 திசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசாங்கத்தின் அரசிறை கணக்குகளின் பொழிப்பு

( அரசிறை குறியீடு ஒவ்வொன்றிற்குமாக தயாரிக்கப்பட்டுள்து)

**Revenue Accounts for the Government of the Democratic Socialist Republic of Sri Lanka for the year ended 31st December 2013 (To be prepared for each Revenue Code)**

ආදායම් ගණන්දීමේ නිලධාරි / அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர் / Revenue Accounting Officer :

වියදම් ශීර්ෂ අංකය / செலவின தலைப்பு இல: / Expenditure Head No.

| No. | | | | | | | Rs. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | I මෙම ගිණුමට අදාල ආදායම් සංකේතය : | | I இக்கணக்கு தயாரிக்கப்பட்டுள்ள அரசிறை குறியீடு | | I Revenue Code for which this Account is prepared: | | |
| | II ආදායම් සංකේත විස්තරය : | | II அரசிறை குறியீட்டின் விவரணம் | | II Description of the Revenue Code: | | |
| 2 | පූර්ව මුදල් වර්ෂ 3 සඳහා ශුද්ධ ආදායම් රැස්කිරීම | වර්ෂය - 1 (2012) | முந்திய மூன்று நிதியாண்டிற்கான தேறிய அரசிறை சேகரிப்பு | ஆண்டு-1 (2012) | Net Revenue Collection for the three preceeding financial years : | Year - 1 (2012) | රු./ ரூபா/Rs. |
| | | වර්ෂය-2 (2011) | | ஆண்டு-2 (2011) | | Year - 2 (2011) | |
| | (වර්ෂ 2010 සහ ඊට පෙර වර්ෂ) | වර්ෂය-3 (2010) | (2010 ஆண்டு மற்றும் முன்னைய வருடங்களும்) | ஆண்டு-3 (2010) | (year 2010 and previous years) | Year - 3 (2010) | |
| | <u>වාර්තා කරනු ලබන වර්ෂය සඳහා ගිණුම් විස්තර</u> | | **<u>அறிக்கையிடும் ஆண்டிற்கான கணக்கீட்டுத்தகவல்</u>** | | **<u>Accounting Information for the Reporting year</u>** | | රු./ ரூபா/Rs. |
| 3 | මූලික ආදායම් ඇස්තමේන්තුව | | மூல அரசிறை மதிப்பீடு | | Original Revenue Estimate | | |
| 4 | සංශෝධිත ආදායම් ඇස්තමේන්තුව | | திருத்திய அரசிறை மதிப்பீடு | | Revised Revenue Estimate | | |
| 5 | දළ ආදායම් රැස්කිරීම | | மொத்த அரசிறை மதிப்பீடு | | Gross Revenue Collection | | |
| 6 | සිදු කරන ලද ආපසු ගෙවීම් | | செய்யப்பட்ட மீளளிப்புகள் | | Refunds made | | |
| 7 | ශුද්ධ ආදායම් රැස්කිරීම | | தேறிய அரசிறை மதிப்பீடு | | Net Revenue Collection. | | |
| | **<u>හිඟ ආදායම් (තිබේ නම්)</u>** | | **<u>அரசிறை நிலுவைகள் (ஏதாவதிருந்தால்)</u>** | | **<u>Arrears of Revenue (if any).</u>** | | රු./ ரூபா/Rs. |
| 8 | පසුගිය වසරට පෙර වසර වන විට මුළු හිඟ මුදල් (දළ වටිනාකම) | | முந்திய ஆண்டிற்கு முற்பட்ட ஆண்டுவரையுள்ள நிலுவைகள் | | Arrears up to the year before the previous year. | | |
| 9 | පසුගිය වසරට අදාළ හිඟ මුදල් (දළ වටිනාකම) | | முந்திய ஆண்டின் தொடர்பில் நிலுவைகள் | | Arrears in respect of the previous year. | | |
| 10 | වාර්තා කරනු ලබන වසරට අදාල හිඟ මුදල් | | அறிக்கையிடும் ஆண்டின் தொடர்பில் நிலுவைகள் | | Arreas in respect of the Reporting year. | | |
| 11 | ඉහත අයිතම් (8+9+10) එකතුව | | அறிக்கையிடும் ஆண்டின் முடிவில் மொத்த நிலுவைகள் (8,9,10) | | Total Arrears as at the end of the Reporting year (8+9+10) | | |
| 12 | වාර්තා කරනු ලබන වසර තුල අත්හරින ලද හා කපා හරින ලද මුළු ප්‍රමාණය - එක් එක් වසර වෙන් වෙන්ව | | ஒவ்வொரு ஆண்டிற்கும் வேறு வேறாக அறிக்கையிடும் ஆண்டின் தள்ளுபடி செய்யப்பட்டு பதிவழிக்கப்பட்ட தொகை | | Total amount waived and written off during the Reporting year - seperately for each year | | |
| 13 | වාර්තා කරනු ලබන වසර තුල හිඟ මුදලට අනුරූපීව රැස්කරන ලද මුළු ප්‍රමාණය - එක් එක් වසර වෙන් වෙන්ව | | ஒவ்வொரு ஆண்டிற்கும் வேறு வேறாக அறிக்கையிடும் ஆண்டில் நிலுவைக்கு எதிராக சேகரிக்கப்பட்ட மொத்த தொகை | | Total amount collected against arrears during the Reporting year - seperately for each year | | |
| 14 | වාර්තා කරනු ලබන වසර අවසාන වන විට ආදායම්වල මුළු ශුද්ධ හිඟ මුදල(11-12-13) | | அறிக்கையிடும் ஆண்டின் முடிவில் இருந்தவாறான அரசிறையின் மொத்த தேறிய நிலுவைகள் (11-12-13) | | Total Net Arrears of Revenue as at the end of the Reporting year (11-12-13). | | |

| | විචල්‍යතාව විශ්ලේෂණය(අතිරික්තය/හිඟය) වාර්තා කරනු ලබන වසර සඳහා | மாறுபாட்டின் (மிகைக /குறைவு) பகுப்பாய்வு அறிக்கையிடும் ஆண்டு | Variance (Excess/ (Shortfall) Analysis - Reporting year. | රු./ ரூபா/Rs. |
|---|---|---|---|---|
| 15 | මූලික ආදායම් ඇස්තමේන්තුව හා සංශෝධිත ඇස්තමේන්තුව අතර වෙනස | மூல அரசிறை மதிப்பீட்டிற்கும் திருத்திய மதிப்பீட்டிற்கும் இடையிலான மாறுபாடு | Variance between Original Revenue Estimate and Revised Revenue Estimate. | |
| 16 | සංශෝධිත ඇස්තමේන්තුව හා ශුද්ධ ආදායම් රැස්කිරීම් අතර වෙනස | திருத்திய மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான தேறிய அரசிறை சேகரிப்பிற்கும் இடையிலான வேறுபாடு | Variance between Revised Revenue Estimate and Actual Net Revenue Collection. | |

17 ඉහත (15) හි සඳහන් විචල්‍යතාවයට බලපෑ මැනිය හැකි හේතු / (15) இல் மாறுபாட்டிற்கான அளவிடக்கூடிய காரணங்கள்/ Measurable reasons for the variance at (15) above:

18 ඉහත (16) හි සඳහන් විචල්‍යතාවයට බලපෑ මැනිය හැකි හේතු / (16) இல் மாறுபாட்டிற்கான அளவிடக்கூடிய காரணங்கள்°/Measurable reasons for the variance at (16) above:

මෙම ගිණුමෙහි සඳහන් සියළුම සංඛ්‍යා, පවත්වා ගෙන යනු ලබන ගිණුම් පොත්වල සඳහන් සංඛ්‍යා සමඟ එකඟවන බවත්, ඒවා භාණ්ඩාගාර ගිණුම් පොත් සමඟ සසඳන ලද බවත් සහතික කරමි.

இக்கணக்குகளில் காணப்படும் புள்ளி விபரங்கள் வைத்திருக்கப்படும் கணக்குப் புத்தகங்களிலுள்ள புள்ளி விரங்களுடன் ஒத்திருக்கின்றன வெனவும் இப்புள்ளி விரங்கள் யாவும் திறைசேரி கணக்குப்புத்தகத்திலுள்ள புள்ளிவிபரங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளன வெனவும் சான்றுப்படுத்தப்பட்டுள்ளன.

Certify that the figures appear in this Account are in agreement with the figures in the Books of Account maintained and all these figures have been reconciled with the figures in the Treasury Books of Account.

දිනය
திகதி
Date

ප්‍රධාන ගණකාධිකාරී / මුදල් අංශයේ ප්‍රධානී නම් සහ අත්සන
பிரதான கணக்காளரின்/நிதிப்பகுதியின் தலைவருடைய கையொப்பமும் பெயரும்
**Signature and Name of Chief Accountant / Head of Finance**

ආදායම් ගණන්දීමේ නිලධාරී නම, තනතුර සහ අත්සන
அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பமும்,பெயரும்,பதவியும்
Signature, Name and Designation of Revenue Accounting Officer

විගණකාධිපති දෙපාර්තමේන්තුවේ භාවිතය සඳහා / கணக்காய்வாளர் திணைக்களத்தின் உபயோகத்திற்கு/ For the use of Auditor General's Department.